1972 மார்ச் 28]

மாண்புமிகு திரு. மன்னை. ப. நாராயணசாமி : 1,96,000 ஏக்கரில் இந்த உற்பத்தித் திட்டம் செயல்பட்டு வருகிறது. கிட்டத்தட்ட 46.44 கோடி தேங்காய்கள் கிடைக்கின்ற அளவில் அபிவிருத்தி செய்யப்பட்டிருக்கிறது.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : தலைவர் அவர்களே, இந்த நெட்டை ரகம், குட்டைரகம் ஆகிய இரண்டையும் ஒன்று சேர்க்கக் கூடிய வேலை வேப்பங்குளம் பண்ணையில் செய்யப்படுகிறது. அதை இன்னும் வேறு இடத்தில் செய்வதற்கு அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. மன்னை. ப. நாராயணசாமி : ஒரு இடத்தில் செய்யும் திட்டம் இருக்கிறது. மேலும் செய்வதற்கான திட்டம் யோசிக்கப்படும்.

* 761. **வினா—திரு. எம். முத்தையா** : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னை வளர்ப்புக்காக இவ்வாண்டில் நிதி ஒதுக்கப் பட்டுள்ளதா ?

(இ) ஆமெனில், எவ்வளவு ?

மாண்புமிகு திரு. மன்னை. ப. நாராயணசாமி : (அ) ஆம்.

(இ) நடப்பு நிதியாண்டில் தென்னை வளர்ப்புக்காக ரூபாய் 26,27,500 ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மாயூரம்—வைதீஸ்வரன் கோயில் நகரப் பேருந்து.

* 762. **வினா. திரு. என். கிட்டப்பா** : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பொது மக்களின் கோரிக்கைப்படி மாயூரத்திற்கும் வைத்தீஸ்வரன் கோயிலுக்கும் இடையே பட்டவர்த்தி வழியாக நகரப் பேருந்து ஒன்று விட தஞ்சைப் பிரதேச போக்குவரத்து அதிகாரி அவர்களால் ஒரு வழித்தடம் அனுமதிக்கப்பட்டது உண்மையா ?

(இ) ஆம் எனில், அது பின்னர் ஏன் ரத்து செய்யப்பட்டது ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) ஆம்.

(இ) தஞ்சாவூர் வட்டாரப் போக்குவரத்து அதிகாரி பிறப்பித்த ஆணை பேருந்து உரிமையாளர்களில் ஒருவர் செய்து கொண்ட மேல் முறையீட்டின் பேரில், சென்னையிலுள்ள மாநிலப் போக்குவரத்து மேல்முறையீட்டு நடுவர் மன்றத்தினுல் தள்ளுபடி செய்யப்பட்டது.

Shore temples

* 763 *Q.*—THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state the steps taken by the Government to protect the shore temples from the ravages of the sea?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : திருச்செந்தூரிலுள்ள சுப்பிரமணிய சுவாமி கோயிலும், தரங்கம்பாடியிலுள்ள மாசில்லா நாதர் கோயிலும் கடல் அரிப்பினுல் பாதிக்கப்பட்ட கடற்கரை கோயில்களாகும். கடல் அரிப்பைத் தடுப்பதற்காக, சுப்பிரமணிய சுவாமி கோயிலுக்கு ரூ. 3.5 இலட்சம் ஒதுக்கப்பட்டு வேலைகள் நடைபெற்று வருகின்றன. மாசில்லா நாதர் கோயிலுக்கு ரூ. 2 இலட்சம் ஒதுக்கப்பட்டு இக்கோயிலை அந்தக் கிராமத்தின் உட்பகுதிக்கு மாற்றுவதற்கான வேலைகள் நடைபெற்று வருகின்றன.

திரு. என். கே. பழனிசாமி : தலைவரவர்களே, திருச்செந்தூர் கோவிலுக்கு ஒதுக்கப்பட்ட தொகை போதாது, ஏனென்ருல் வருஷா வருஷம் மண் அரிப்பினுல் பாதிக்கப்படுவதால், சர்க்கார் இன்னும் கொஞ்சம் அதிகமாக பணம் ஒதுக்கி ஏதாவது செய்ய முன்வருமா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, கடல் அரிப்பைத் தடுக்கின்ற வகையில் தூத்துக்குடி துறைமுகத்தின் தலைமைப் பொறியாளர் அவர்களால் மதிப்பீடு தயார் செய்து 3½ லட்சம் ரூபாய் செலவில் வேலைகள் துவங்கப்பட்டிருக்கின்றன. அந்த வேலை போதுமானது என்று அரசு கருதுகிற காரணத்தால் அந்த வேலையை நாம் மேற்கொண்டு இருக்கிறோம்.